## 3.17 தொகுப்பு வீடுகள் பயனாளிகள் – பாரபட்சமற்ற பயனாளிகளின் பட்டியல் தயாரித்தல் குறித்த அறிவுரைகள்

ந.க.எண் 106695/99/திட்டம்,1–2 நாள் 16.12.1999

**சுற்றறிக்கை**

பொருள்– மத்திய அரசின் நிதியுதவியுடன் ஊரக பகுதிகளில் வீடுகள் கட்டும் திட்டம்– செயல்படுத்துதல்– பயனாளிகள் தேர்வு செய்தல் – பராபட்சமற்ற பயனாளிகளின் பட்டியல் தயாரித்தல், சில அறிவுரை வழங்குதல் சார்பு

மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தொகுப்பு வீடுகள் திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் கிராமங்களை தேர்வு செய்யும் பொறுப்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் உள்ளது. கிராமங்களை தேர்வு செய்யும்பொழுது இதுவரை பயன்பெறாத கிராமங்கள் , வீடுகள் இல்லாதோர் எண்ணிக்கை, பட்டா வழங்கப்பட்ட நாள் மற்றும் கொத்தடிமையிலிருந்து விடுபட்ட குடும்பங்கள் போன்ற பல்வேறு விபரங்களின் அடிப்படையில் தேர்வு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. கிராமங்களை தேர்வு செய்யும் பொழுது பெரும்பாலும் அந்த கிராமத்திலுள்ள மொத்த பயனாளிகளை தேர்வு செய்து அதனுடைய எண்ணிக்கையை கணக்கில் கொள்ளாமல் கிராமங்கள் தேர்வு செய்த பின் வீடுகள் இல்லாத பயனாளிகளிலிருந்து ஒதுக்கீட்டுக்கேற்ப குறைவான பயனாளிகளை தேர்வு செய்யும் பொழுது கிராம தலைவர்கள் ஒரு சில தவறுகளுக்கு உடந்தையாக இருப்பதாக ஆங்காங்கே புகார்கள் வந்த வண்ணம் உள்ளன, தகுதியுள்ள பயனாளிகளை தேர்வு செய்யும்போது தகுதிக்கு முன்னுரிமை தராமல் பராபட்சமாக நடந்து கொள்வதற்கான வாய்ப்புகளும் இருப்பதால் இதுபோன்ற குற்றச்சாட்டுகளை நாம் புறந்தள்ள முடியாது. இத்தகைய போக்கு அரசுக்கு மிகுந்த அவபெயரை ஏற்படுத்துவதுடன் ஒரு நேர்மையான நிர்வாகத்திற்கு இடையூறாகவும் இருக்கிறது.

இது குறித்து விரிவாக பரிசீலித்ததில் இத்தகைய தவறுகள் நிகழாவண்ணம் பயனாளிகளின் தேர்வும் கிராமங்களின் தேர்வும் தகுதிகளின் அடிப்படையில் பராபட்சமின்றி பயனாளிகளை தேர்வு செய்யவும் ஒரு வழிமுறையை வகுக்க வேண்டியது அவசியம் என கருதப்படுகிறது. இதன்படி அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும், திட்ட அலுவலர்களும் கீழ்கண்ட நெறிமுறைகளை பின்பற்றி தொகுப்பு வீடுகள் திட்டம், குடியிருக்க தகுதியில்லாத கச்சா வீடுகளை மேம்பாடு செய்யும் திட்டம் போன்ற திட்டங்களுக்கு தகுதியான நபர்களை தகுதிக்கேற்ப முன்னுரிமைபடுத்தி ஒட்டுமொத்த பட்டியல் தயாரித்து அதன் அடிப்படையில் கிராமங்களையும் பயனாளிகளையும் தேர்வு செய்து இத்திட்டங்களை சிறப்பாக நடைமுறைப்படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- கச்சா வீடுகளை குடியிருக்க தகுந்த வீடுகளாக மேம்பாடு செய்யும் திட்டத்தில் முழுமையாக புதிய வீடுகளை கட்டுவது இந்த ஆண்டு மட்டுமே செய்யப்படும். அடுத்த நிதியாண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் கச்சா வீடுகளை மேம்படுத்துவதற்கு மட்டுமே ரூ.10000 வழங்கப்படும். தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு எப்போதும்போல் உள்ள புதிய தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு ஒதுக்கப்படும் தொகையிலிருந்து நிதியுதவி வழங்கப்படும்.
- ஒவ்வொரு கிராமத்திலும் வீடுகள் அல்லாத பட்டா உள்ள அல்லது பட்டா வழங்கப்பட்ட குடும்பங்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு அவர்களின் வருமானத்தின் அடிப்படையில் முன்னுரிமைபடுத்தி பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். பட்டா இல்லாத வீடுகள் அற்ற குடும்பங்களின் பட்டியலும் தயாரிக்கப்பட்டு அவர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா முதல் கட்டமாக வழங்கவும் ஏற்பாடு செய்யலாம்.
- குடியிருக்க தகுதியில்லாத மிக மோசமான குடிசைகளை (அதாவது கச்சா வீடுகள் ரூ.10000 செலவில் மேம்பாடு செய்து–குடியிருக்க வசதியான வீடாக மாற்ற வாய்ப்புள்ள வீடுகளில் குடியிருக்கும் குடும்பங்களை ஆதிதிராவிடர்களுக்கு தனியாகவும் பிற சமுதாயத்தினருக்கு தனியாகவும் ஒவ்வொரு கிராமத்திற்கும் முன்னுரிமை அடிப்படையில் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்.
- புதிய வீடுகள் கட்டுவதற்கும் கச்சா வீடுகளை மேம்பாடு செய்வதற்கும் பயனாளிகளை தேர்வு செய்யும்போது அவர்களுக்கு பட்டா ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதா ? அல்லது சொந்தமாக பட்டா வைத்திருக்கின்றனரா ? இத்தகைய பட்டியலில் வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்கள் மட்டுமே சேர்க்கப்பட வேண்டும்.

- இத்தகைய பட்டியலை கிராம ஊராட்சிகள் கிராம சபையில் வைத்து அனுமதி பெற்ற பின்பு அதை மேல் அலுவலர்களை கொண்டு ஒரு சிறப்பு தல ஆய்வுக்கு ஏற்பாடு செய்து 100 சதவீதம் தணிக்கை செய்யப்பட வேண்டும். அவற்றில் தகுதியில்லாத நபர்கள் யாரேனும் இருப்பின் அந்த குடும்பங்களின் விவரத்தை நீக்கம் செய்து ஊராட்சிகளுக்கு தெரிவித்து மாவட்ட அளவிலும் தொகுத்து திட்ட உதவி வழங்கலாம்.
- மாவட்ட ஆட்சித் தலைவர் கிராமங்களுக்கு முன்னுரிமை பட்டியலை தயாரிக்கும்போது கிராமங்களிலுள்ள வீடுகள் இல்லாதோர் எண்ணிக்கை, பட்டா வழங்கப்பட்ட நாள், கொத்தடிமை, விதவை போன்ற சிறப்பு தகுதிகள், சில கிராமங்களுக்கு வழங்கப்பட வேண்டிய சிறப்பு முன்னுரிமை போன்றவற்றின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.
- இவ்வாறு முன்னுரிமைபடுத்தப்பட்ட கிராம பட்டியல் தயாரித்த பின் இரண்டு திட்டங்களுக்கும் தனியாக முழுமையான தேவைப் பட்டியல் ஒன்றிய வாரியாக மாவட்ட அளவில் தயாரிக்கப்பட வேண்டும். இத்தகைய பட்டியல் ஒவ்வொரு ஒன்றியத்திலும் முன்னுரிமையில் தேர்வு செய்யப்பட வேண்டிய கிராமங்கள், ஒவ்வொரு கிராமத்திலும் முன்னுரிமையில் தேர்வு செய்யப்பட வேண்டிய பயனாளிகள் போன்ற விவரங்களை கொண்டதாக அமைய வேண்டும்.
- ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கப்படும் வீடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாவட்ட ஆட்சித் தலைவர் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒதுக்கீடு செய்யும் எண்ணிக்கை அந்த கிராமங்களில் முன்னுரிமையிலுள்ள கிராமங்களுக்கும் முன்னுரிமையில் உள்ள பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.
- ஒரு கிராமத்தில் குறைந்த எண்ணிக்கையில் வீடுகள் தேவைப்படும்போது அவற்றை ஒரே ஆண்டில் முழுமையாக பூர்த்தி செய்துவிடலாம். அதிக அளவில் ஒரே கிராமத்தில் தேவை ஏற்பட்டால் அவற்றை பிரித்து ஓரிரு ஆண்டுகளில் பூர்த்தி செய்யலாம்.
- இந்த பட்டியலை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்தல் அவசியம்.

இவ்வாறு நெறிமுறைகளை பின்பற்றும்போது தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்றாற்போல் ஊராட்சித் தலைவர்கள் பயனாளிகளை தேர்வு செய்யும் போக்கு மாற்றப்படுவதுடன் ஒரு வெளிப்படையான நடைமுறையும் பயனாளிகளை தேர்வு செய்வதில் இருக்கும் என கருதப்படுகிறது. இத்தகைய இறுதிப் பட்டியல் தயாரிக்க அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஜனவரி 1–ந் தேதியிலிருந்து தொடங்கி ஜனவரி இறுதிக்குள் முடித்து அடுத்த ஆண்டு தொடங்கும்போது இத்திட்டங்களின் ஒட்டு மொத்த தேவைகள் என்ன ? அவற்றை ஆண்டுந்தோறும் எந்த கிராமத்திற்கு எந்த பயனாளிகளுக்கு வழங்க வேண்டும் என்பது பற்றிய ஒரு செயல் திட்ட நகலை இயக்குநரகத்திற்கு 15.2.2000க்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

ஊரக வளர்ச்சி இயக்குநர்

பெறுநர்
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்